IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.401/2026

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கல்பனா | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை**

நான் சென்னை திருவேற்காட்டில் வசித்து வந்து கேபிள் வேலை செய்து வந்து தற்போது வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். 21.08.2025 அன்று ஈரோட்டில் இருந்து கோயம்புத்தூர் செல்வதற்காக ஈரோடு ரயில் நிலையத்திற்கு மதியம் 12 மணிக்கு வந்தேன். நான் செல்ல வேண்டிய ரயில் மிஸ் ஆனதால் 2.30 மணிக்கு கோயம்புத்தூர் செல்லும் ஜெய்ப்பூர் ரயிலில் பொது பெட்டியில் ஏறி பின்னால் நானும் எனது கணவரும் அமர்ந்திருந்தோம். 2.45 மணிக்கு ரயில் கிளம்பியது.

ரயில் கிளம்பிய சிறிது நேரத்தில் காற்று வராததால் எனது கணவர் ஜன்னல் ஓரம் நின்று இருந்தார். அப்போது பாத்ரூமில் இருந்து ஒரு ஆண் நபர் வெளியில் வந்து அவர் கையில் வைத்திருந்த கண்ணாடி துண்டால் எனது கணவரின் வலதுபுற விழா எலும்பில் குத்தி விட்டார். நாங்கள் அவரை பிடிக்க சென்றபோது ஓடும் ரயிலில் இருந்து அவர் கீழே குதித்து விட்டார். எங்களுடன் பயணம் செய்த ஒருவர் ரயிலின் செயினை பிடித்து இழுத்து நிறுத்தி விட்டார். அதன் பிறகு அங்கிருந்து ஒருவர் வந்து எனது கணவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்.

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.15 17:41:19 +0530

பின்னிட்டு அங்கு ஆம்புலன்ஸ் வருவதற்கான வசதி இல்லாததால் பெருந்துறை ரயில் நிலையத்தில் நிறுத்தி 108 ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை மெடிக்கல் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். அப்போது எனது அக்கா, அக்கா கணவர் ஆகியோர் வந்துவிட்டதால், அங்கு எனது கணவரை சிகிச்சைக்கு விட்டு விட்டு நான் புகார் கொடுப்பதற்காக ஈரோடு ரயில் நிலையம் வந்து விட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **புகார் அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

புகார் கொடுத்துவிட்டு நான் மீண்டும் மருத்துவமனைக்கு சென்று விட்டேன். பின்னிட்டு எனது கணவரை எமெர்ஜென்சி கேர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக மாற்றி விட்டோம். அங்கே எனது கணவர் 6 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். பின்னிட்டு அங்கு அறுவை சிகிச்சை செய்யும் வசதி இல்லாததால் செந்தில் மருத்துவமனைக்கு எனது கணவரை அறுவை சிகிச்சைக்காக மாற்றினோம். செந்தில் மருத்துவமனையில் எனது கணவர் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். எனது கணவர் சிகிச்சையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆன பிறகு நானும் எனது கணவர், மற்றும் அன்றைய தினம் ரயிலில் பயணம் செய்த மணிவண்ணன் ஆகியோர் கோபிசெட்டிபாளையம் சிறைக்கு சென்று எதிரியை அடையாளம் காட்டினோம்.

ஆஜர் எதிரிதான் அன்றைய தினம் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது. அவரை தான் கோபிசெட்டிபாளையம் சிறையிலும் அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.15 17:41:27 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் ரயில் எவ்வளவு வேகத்தில் சென்றது என்றால், அப்போது தான் ரயில் ஐந்து நிமிடத்திற்கு முன்பு கிளம்பியது. ரயிலின் செயினை பிடித்து இழுத்தவுடன் வண்டி நின்று விட்டது. ஓடிய நபரை யாரும் இறங்கி சென்று பிடிக்கும் முயற்சி செய்யவில்லை என்றால், ஓடும் ரயிலேயே அந்த நபர் குதித்து ஓடிவிட்டார். பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனை, எமர்ஜென்சி கேர் மருத்துவமனை, செந்தில் மருத்துவமனை ஆகியவற்றில் நான்தான் எனது கணவரை சிகிச்சைக்கு சேர்த்தேன்.

ரயில் நின்றவுடன் போலீசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். அப்போதே புகார் கொடுத்து விட்டேனா என்றால் இல்லை. எனது கணவரை சிகிச்சைக்கு சேர்த்து விட்டு வந்து தான் புகார் கொடுத்தேன். போலீசார் எப்போது எனது கணவரை குத்திய நபரை கண்டுபிடித்து விட்டார்கள் என்று எனக்கு போன் செய்து சொன்னார்கள் என்றால் நான் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றவுடன் அந்த நபரை பிடித்து விட்டதாக எனக்கு போன் செய்து சொன்னார்கள். நான் உடனே சென்று பார்த்தேனா என்றால் எனது கணவருடன் யாரும் இல்லை என்பதால் நான் பார்க்கவில்லை.

எனது கணவரை குத்தியதாக சொல்லப்படும் கண்ணாடி துண்டை எடுத்து கொடுத்தேனா என்றால் போலீசார் வந்து தான் அதை கைப்பற்றினார்கள். எனது கணவரை ரயிலில் குத்திய பிறகு முதல் உதவி சிகிச்சை அளிக்க வந்தபோது போலீசார் கைப்பற்றி விட்டார்கள். அப்போது போலீசார் அவர்களை பிடிக்கவில்லை என்றால், அவர் ஓடும் ரயிலில் இருந்து குதித்து ஓடி விட்டதால் பிடிக்கவில்லை.

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.15 17:41:34 +0530

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் வேறு யாரையோ பிடித்து வந்து இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாக காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.15 17:41:41 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.401/2026

Deposition of Witness PW2

Name : ஜெயக்குமார் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்

முதல் விசாரணை

நான் சென்னையில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். 21.08.2025 அன்று 12 கோயம்புத்தூர் செல்வதற்காக, நானும் எனது மனைவியும் ஈரோடு ரயில் நிலையத்திற்கு வந்தோம். 12 மணிக்கு செல்லும் ரயில் கிளம்பி விட்டதால் ஜெய்பூர் செல்லும் 2.30 மணி ரயிலில் பொதுஜன பெட்டியில் பின்புறம் உள்ள கோச்சில் ஏறி நானும் எனது மனைவியும் பயணம் செய்தோம். 2.45 மணிக்கு வண்டி கிளம்பிவிட்டது. வண்டி கிளம்பிய ஐந்து நிமிடத்தில் காற்று வாங்குவதற்காக ஜன்னல் ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு பெண் பயணி பாத்ரூம் கதவை ஓபன் செய்தபோது அந்த பாத்ரூமில் இருந்து ஒரு நபர் கையளவு நீளமுள்ள கண்ணாடித் துண்டால் நான் மேலே கையைப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தபோது எனது வலது புற விலா எலும்பில் குத்திவிட்டார். நான் வலி தாங்க முடியாமல் கத்திய போது எனது மனைவியும் கத்தினார். அப்போது அங்கு இருந்தவர்கள் ரயிலின் செயினை பிடித்து இழுத்து

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.15 17:41:49 +0530

நிறுத்தி விட்டார்கள். என்னை குத்திய நபர் வண்டியிலிருந்து கீழே இறங்கி ஓடிவிட்டார். அங்கு ஆம்புலன்ஸ் வர வசதி இல்லாததால் அங்கு வந்த போலீசார் எனக்கு முதல் உதவி செய்து பின்னிட்டு பெருந்துறை ரயில் நிலையத்தில் வண்டியை நிறுத்தி அங்கிருந்து ஆம்புலன்ஸ் மூலம் பெருந்துறை மருத்துவமனைக்கு எனது மனைவியும், எங்களுடன் பயணம் செய்த மணிகண்டன் என்பவரும் அழைத்துச் சென்றனர்.

பெருந்துறை மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்து விட்டு மூச்சு விட மிகவும் சிரமமாக இருந்ததால் ஈரோடு எமர்ஜென்சி கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். பின்னர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்பதாலும் அறுவை சிகிச்சை வசதி மருத்துவமனையில் இல்லை என்பதாலும் அங்கிருந்து செந்தில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்து அங்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நான் பெருந்துறை மருத்துவமனையில் இருந்த போது எனது மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். எனக்கு அறுவை சிகிச்சை முடிந்த பின்பு வழக்கு சம்பந்தமாக ரயில்வே போலீசார் என்னையும், எனது மனைவி, மணிவண்ணன் ஆகியோரை அழைத்துச் சென்று கோபி கிளை சிறையில் எதிரியை அடையாளம் காட்டுமாறு சொன்னதன் பேரில் நாங்கள் அங்கு சென்றோம். அங்கு நிறைய பேரை நிற்க வைத்து இருந்தார்கள் அதில் எதிரியை அடையாளம் காட்டினேன்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கண்ணாடி துண்டால்தான் எதிரி என்னை குத்தினார். கண்ணாடி துண்டு புகைப்படம் **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் நல்ல நிலையில் தான் இருந்தேன். எதிரி என்னை கண்ணாடி துண்டால்

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.15 17:41:57 +0530

குத்திய பிறகு தான் எனக்கு உடல்நிலை மிகவும் மோசமாகி சரியாக பேச இயலாமல் எப்போதும் பதட்டமாகவே உள்ளது. ஆஜர் எதிரிதான் அன்றைய தினம் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது. அவரை தான் கோபிசெட்டிபாளையம் சிறையிலும் அடையாளம் காட்டினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

ரயில் வண்டி எவ்வளவு வேகமாக சென்று கொண்டிருக்கும்போது சம்பவம் நடந்தது என்றால் 80 கிலோமீட்டர் வேகத்தில் வண்டி சென்றது. ரயிலின் செயினை பிடித்து இழுத்தவுடன் எவ்வளவு நேரத்தில் வண்டி நின்றது என்றால் ஐந்து நிமிட நேரத்தில் நின்றுவிட்டது. எதிரி என்னை குத்திய கண்ணாடி துண்டை எதிரியிடமிருந்து போலீசார் கைப்பற்றவில்லை என்றால் எனக்கு தெரியாது. கண்ணாடி வண்டிக்குள் கிடந்தது. என்னை குத்திய கண்ணாடி எவ்வளவு பெரிய கண்ணாடி என்றால் சாட்சி தனது கையை காண்பித்து முழங்கைக்கு சற்று கீழே உள்ள உயரம் வரை இருக்கும் என்று அடையாளம் காட்டுகிறார்.

எதிரியை பிடித்து விட்டோம் வந்து அடையாளம் காட்டுங்கள் என்று எப்போது போலீசார் சொன்னார்கள் என்றால், நான் டிஸ்சார்ஜ் ஆகி மூன்று மாதம் கழித்து போலீசார் சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். நானும் எனது மனைவி, மணிவண்ணன் ஆகியோர் ஒரு அறையில் வைத்து மூன்று முறை அடையாளம் காட்டினோம். அப்போது நான்கு, ஐந்து நபர்களுடன் எதிரி இருந்தார்.

வண்டியை நிறுத்திய உடன் ஒரு போலீசார் போலீசார் அங்கு

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.15 17:42:04 +0530

வந்தார். எனது ரத்தக்கரை படிந்த உடையை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் எனக்கு தெரியாது ஞாபகம் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றும் வேறு யாரையோ பிடித்து வந்து இந்த வழக்கில் சம்பந்தப்பட்டதாக காண்பித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. என்னை குத்திய கண்ணாடி கீழே போட்டு இருந்தால் உடைந்திருக்கும் என்றும், இந்த வழக்கின் சான்று பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், வழக்கில் காட்டப்பட்டுள்ள சான்று பொருளால் தான் எதிரியை என்னை குத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர்.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.15 17:42:09 +0530